1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1990) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

உணவு வழங்கு நிறுவனங்கள் திருத்த சட்டமுன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங் கள் (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ரத்து செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் What has been stated in the Statement of Objects and Reasons is, ''....based on the suggestions of the said Committee on Labour laws, it has been decided to amend the Tamil Nadu Catering Establishments Act.'' இந்தக் குழு யாருடைய தலைமையில் போடப்பட்டது? எப்போது கூட்டம் நடந்தது? அறிக்கை வந்ததா? அது இல்லாமல் எப்படி திருத்தம் செய்ய முடியும்? That is why, I sent a petition to the Hon. Speaker raising my objection for the introduction, in the Assembly, of a Bill to amend the Catering Establishments Act. We do not know the recommendations of this Committee on Labour legislation; we do not know when the Committee was constituted, when the report of the Committee was submitted to the Government, when the report of the Committee was placed on the table of the douse, etc. That is why I have stated that to bring in the amendment to the Catering Establishments Act, based on that Report, is improper. Therefore, I have requested the Hon. Speaker kindly not to permit the Bill to be taken up for consideration in the House at this stage and to direct the Government to table the Report first in the House.

---

*21—8—1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

12-00 மணி

அந்த ரிப்போர்ட் இல்லாமல் இதை இங்கே வைப்பது சரியல்ல. தயவுசெய்து நான் மனு தாக்கல் செய்கிறேன். இதை இத்தோடு, வித்ட்ரா செய்துவிட்டு ரிப்போர்ட்டை எங்களுக்குத் தாக்கல் செய்யுங்கள். அதற்குப் பிறகு நான் சொல்ல வேண்டியதை சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, He is on a point of order. The report has not been placed on the Table of the House. அது கிளீயராக இருக்கிறது. Statement of Objects and Reasons-ல் "On the basis of the report the amendments are being brought forward" கிளீயராக இருக்கிறது. Where is the report?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு இதுபோல தொழிலாளர்களுக்கு என்று இருக்கின்ற சட்டத்தில் உணவு வழங்கும் நிறுவனங்கள் திருத்தச் சட்டமுன்வடிவை திருத்த வேண்டும். இதில் இருக்கின்ற அத்தனைப் பிரிவுகளுக்கும் தனியாக சட்ட முன் வடிவு கொண்டுவர வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டு 1978-ல் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தொழிலாளர் நலத் துறை செயலாளர் அவர்களைத் தலைவராகவும். தொழிலாளர் நல ஆணையாளரை கன்வீனராகவும் 3 சட்டமன்ற உறுப்பினர்கள் 9 தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் 9 தொழில் அதிபர்களை கொண்டு அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஆராய்ந்து 1978-ல் அரசுக்கு அறிக்கை ஒன்றைத் தந்தது. அரசு அதைப் பரிசீலித்து 1981 ஆம் ஆண்டு அதைத் திருத்தச் சட்டமுன்வடிவாக கொண்டு வர வேண்டுமென்று அனுப்பியிருந்தாலும். 9 ஆண்டுகாலம் அதைக் கொண்டுவராத காரணத்தால் இந்த ஆண்டு இங்கே திருத்தச் சட்டமுன்வடிவாக கொண்டு வந்திருக்கிறார்கள். அதனுடைய நகல்களை வேண்டுமானால் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு).

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. இங்கே அது தரப்படும் என்பதல்ல. என்ன அமெண்ட்மென்ட் என்று எங்களுக்கு எப்படி தெரியும்? படிப்பது என்பதல்ல. வாசகத்தை மட்டும் வைத்திருக்கிறீர்கள். The report should be placed on the table of the House. Statements of Objects and Reasons-ல் ஒன்றும் இல்லை. What are the recommendations? When the report was placed? அதை பிளேஸ் பண்ணீர்களா இல்லையா என்பதை சொல்லுங்கள். Unless you place a copy of the report on the table of the house, how can we argue? I request you to place the Report.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. இது ஏற்கனவே இந்த அவையில் வைக்கப் பட்டது. சில நேரங்களில் இன்றைக்கு வைக்கிற சில பேப்பர் கள் அடுத்த முறை டிஸ்கஷனுக்கு வரும். அப்போது மறு படியும் வைக்க மாட்டார்கள். அதுமாதிரி வரும்போது பொறுப் புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு போய் அல்லது செயலாளரை கலந்து பேசி. அல்லது லைப்பரரிக்கு போய் வைக்கப்பட்டதை எடுத்து படித்து வர வேண்டும். நாங்கள் எதிர்க் கட்சியாக இருக்கும்போது அதைத்தான் செய் திருக்கிறோம். அப்போதைக்கப்போது பில் வருகிற போது எல்லாம் ஒவ்வொரு அறிக்கை வைக்கமாட்டார்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. It is not correct இதை எப்படி சொல்ல முடியும் ? அப்படி என்றால் எந்த பில் வந்தாலும் லைப்பரரியில் போய் படிக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா? இங்கே வைத்திருக் கிறீர்களா ? எப்போது வைத்திருக்கிறீர்கள் ? அப்படி என்றால் அதைச் சொல்லுங்கள். What is the record ?

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. 1978 ஆம் ஆண்டு இங்கே இந்த ரிப்போர்ட்டை வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அன்றைக்கு இருந்த எம்.எல்.ஏ. க்கள் வேறு. அந்த 5 ஆண்டுக் காலத்தில் ஓர் அறிக்கை வைத்திருந்தால் அந்தப் பொறுப்பை அந்த எம்.எல.ஏ.க்களிடம் சொல்லலாம். எடுத்துப் படியுங்கள் என்று சொல்லலாம். 1978இல் இங்கே ரிப்போர்ட்டை வைத்த காரணத்தால். அந்த ரிப்போர்ட் இல்லாமல் இந்த மசோதாவைப் பற்றி யாருமே உண்மையிலே விவாதிக்க முடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. அதில் ஒரே ஒரு அமென்ட்மென்ட் மட்டும் கொண்டு வந்திருப்பதாக சொல்கிறார்கள். என்ன திருத்தம் கொண்டு வருகிறார்கள் என்றால். குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சைக்கான சிறப்பு தற்செயல் விடுப்பை வேலை ஆட்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற வகையிலும், ஆள் எவரும் உணவு வழங்கு நிறுவனம் எதிலும் அவருக்கு பெரும்பாலும் ஊறு விளைவிக்கக் கூடிய மிகப் பளுவான சுமை எதையும் தூக்கு வதற்கோ கொண்டு செல்வதற்கோ அல்லது நகர்த்துவதற்கோ வேலைக்கமர்த்தப்படலாகாது என்கிற வகையில் அதிகாரம் அளிக்கும் வகையில் வழிவகை செய்வதாக இதிலே சொல்லி

யிருக்கிறார்கள். ஏற்கனவே குடும்பக் கட்டுப்பாடு செய்பவர்களுக்கு மட்டும் என்று கொண்டு வரப்படுவதாக பொருள் இருக்கிறது. ஆகவே. முழுமையாக செய்யப்பட்ட பரிந்துரைகள் என்ன என்று எங்களுக்கு எல்லாம் தெரிய வேண்டும். இது நியாயமான ஒழுங்கு பிரச்சினை. முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். முன்பு வைக்கப்பட்டிருந்தாலும் இப்போது மீண்டும் வைக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பதில் தேவை.

12-05 மணி

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தங்கள் என்பது பொதுவாக எல்லாச் சட்டங்களுக்கும் சேர்த்துத்தான் அந்தக் குழு அமைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்போது ஒரு அம்சத்தைப் பற்றி மட்டும்தான் இந்த மசோதா வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தது போல, இந்த மசோதாவை இப்போது ஆய்விற்கு எடுத்துக் கொள்வதைத் தவிர்த்து, தள்ளி வைத்து, அந்தக் குழுவினுடைய முழு அறிக்கையும் உறுப்பினர்களுக்குத் தரப்பட்டு, அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யலாம் அல்லது எல்லாத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து வைத்தும் கூட முடிவு செய்யலாம். அந்தக் குழுவின் அத்தனைப் பரிந்துரைகளையும் ஒரு சேர எடுத்துக்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும். இதிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தலையிட்டு, இப்போது இதைத் தள்ளி வைத்து, பின்னாலே எடுத்துக் கொள்ள வேண்டும். அனைத்துக் கட்சிகளோடும், அனைத்து தொழிற் சங்கத் தலைவர்களோடும், பேச்சு வார்த்தை நடத்தி, அந்தக் குழுவின் அறிக்கை எப்போதோ இந்த மன்றத்திலே வைக்கப்பட்டாலும், அது மீண்டும் தரப்பட்டு அதனுடைய அடிப்படையிலே முழுமையான சட்டமுன்வடிவாக எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்குமென்பதைது தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அறிக்கை 1978-லே தயாரிக்கப்பட்டு, வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் விவாதத்திற்கு வரும்போது அறிக்கை அவையிலே வைக்கப்பட வேண்டுமென்பது தேவையில்லாத ஒன்று. ஒரு பில் வரும்போது அதுசம்பந்தமாக அறிக்கை இருப்பதாகச் சொல்லப்பட்டவுடன், அதிலே உரையாற்றுகிறவர்கள் அதைப் தேடிப் பிடித்து, நூலகத்தில் இருந்து எடுத்துப் பார்த்து, உரையாற்றி இருக்க வேண்டும். அது